1974 சனவரி 19]

Link Road from the Rameswaram-Dhanushkodi Road to the Kothandaramaswami temple

* 5. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a link road from the Rameswaram-Dhanushkodi Road to the Kothandaramaswami temple; and

(*b*) if so, the stage at which the matter now stands?

இராமேஸ்வரம்-தனுஷ்கோடி சாலையிலிருந்து கோதண்டராமசுவாமி கோயிலுக்கு இணைப்புச் சாலை

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமேஸ்வரம்-தனுஷ்கோடி சாலையிலிருந்து கோதண்டராமசுவாமி கோயிலுக்கு இணைப்புச் சாலையை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் இத்திட்டத்தை மத்திய சாலை நிதியில் எடுத்துக்கொள்ள மத்திய அரசிடம் அனுமதி கோரலாம் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார். இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Construction of a new dam in Pullur area in North Arcot district

* 6 *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to construct a new dam in Pullur area, Vaniyambadi taluk, North Arcot district; and

(*b*) if so, the present stage of the construction work?

வட ஆற்காடு மாவட்டம், புல்லூர் பகுதியில் புதிய அணை கட்டுதல்

திரு. எல். பலராமன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா, புல்லூர் பகுதியில் புதிய அணை ஏதும் கட்ட திட்டமிடப்பட்டதா ?

(இ) ஆமெனில், இவ்வேலையின் தற்போதைய நிலை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) பாலாற்றின் குறுக்கே புல்லூர் கிராமத்தினருகே அமைக்கப்படவிருக்கும் நீர்த்தேக்கத்திற்கு மதிப்பீடும் வரைபடங்களும் பாசனத் தலைமைப் பொறியாளர் அவர்களின் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளன.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இதற்கு எவ்வளவு தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது, இதனால் எவ்வளவு ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இப்போது போடப்பட்டிருக்கின்ற மதிப்பீட்டின்படி ஏறக்குறைய 302 லட்சம் ரூபாய் ஆகலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. 30,250 ஏக்கராவுக்கு existing cultivation under palar can be stabilised and additional food production of 15,025 tons கிடைக்கும்.

Match factories at Gudiyatham

* 7 *Q*.—THIRU V. ISVARMURTHI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the closure of many match factories at Gudiyatham; and

(*b*) if so, the details thereof?

குடியாத்தத்தில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள்

திரு. வ. ஈஸ்வர்மூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடியாத்தத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?